உ

ஓம் சாயிராம்

# தொண்டர்களின் பணி

வடபிராந்திய
சத்யசாயி நிறுவனங்களின்
இணைப்புக் குழு வெளியீடு

23-1-1993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சாயிராம்

# தொண்டர்களின் பணி

(பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா அவாகள் 20-11-92 அன்று
வெளிநாட்டு சத்யசாயி நிறுவனத் தொண்டர்களுக்கு
பிரசாந்தி மந்திரில் ஆற்றிய உரை)

தமிழாக்கம்:

திரு. ஐ. பொன்னம்பலம் B. A. (Lond)

மீள்பார்வை:

வித்துவான். க. சொக்கலிங்கம் M. A.
(சொக்கன்)

வெளியீடு:

வடபிராந்திய சத்யசாயி நிறுவனங்களின்
இணைப்புக் குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

பகவான் பாபா அவர்களால் 1992-ம் ஆண்டு நவம்பர் 20-ம் நாளன்று பிரசாந்தி மந்திரில் வெளிநாட்டு சத்ய சாயி நிறுவனத் தொண்டர்களுக்கு ஆற்றிய

# அருளுரை.

அன்பின் திருவுருவங்களே!

மனிதன் ஒவ்வொருவனும் சுயநலமும், தன்னிலேயே அக்கறையும் கொண்ட ஒரு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறான். அவன் சமுதாய நலனைத் தன் வாழ்வின் குறிக்கோளாக எண்ணுவதில்லை. மனிதன் சமுதாயத்தின் ஓர் அங்கம். ஒரு நிறுவனத்தை ஆரம்பிப்பதன் நோக்கத்தை ஒவ்வொரு தனிமனிதனும் புரிந்து கொள்ளவேண்டும். எந்த ஒரு நிறுவனமும் பெயரும் புகழும் சம்பாதிக்கவென்று ஏற்படுத்தப்பட்டதல்ல. தன்னை மற்றவர்களிலும் பார்க்க உயர்த்தி உரிமை கோரும் நோக்கம் அதன் கருத்தன்று. தனிமனித மகத்துவம் இரண்டு வழிகளில் வெளிப்படுத்தப்படுகின்றது. ஒன்று புனிதமான பணிகளை மேற்கொள்ளுதலையும் பிறருக்குஉதவுதலையும் குறிக்கின்றது. இன்னொன்று தவறான காரியங்களைச் செய்வதன்மூலம் தன்னை விளம்பரப்படுத்துவது. அவ்வாறான மனிதனும்கூட நல்ல மனிதனைப் போன்றே உலகில் நினைவு கூரப்படுகின்றான். ஆயினும் நல்ல மனிதன் ஒருவன் ஓர் இலட்சியத்தை நிலைநிறுத்த முற்படுகையில், தீயவனோ தன்பால் ஏனையோரின் கவனத்தை ஈர்க்கவும் வசீகரிக்கவுமே செயல்களை ஆற்றுகிறான். நல்லோர் மற்றவர்க்கு எடுத்துக்காட்டாக வாழ்கிறார்கள். தீயவனோ பிறரைத் தன்பால் கவர்ந்திழுக்கும் வாழ்வை மேற்கொள்ளுகிறான். இந்து சமயப் புராணங்களில் இராமர், இராவணன் ஆகியோரின் பெயர்கள் நன்கு பிரபல்யமானவை. இவர்களைப் போலவே கிறீஸ்தவ சமயத்திலும் யேசுவினதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூதாஸினதும் பெயர்களும் நன்குதெரிந்தவையே. இராமரின் பெயர் சொன்னதும் அவர் மதிப்பிற்கும் பாராட்டுக்கும் உரியவராகும்போது, இராவணனுடைய பெயர் இழிவுடன் நோக்கப்படுகின்றது. யேசுநாதர் பற்றிச் சிந்திக்கும்போது அவரது மகிமை எல்லோரது மதிப்பையும் பெறுகின்ற அதேவேளையில், யூதாசு கொடுமையின் சின்னமாகவும் துரோகியாகவும் நினைவுகூரப்படுகின்றான்.

மனிதன் இலட்சிய வாழ்வொன்றைக் கடைப்பிடித்தொழுகவும், சமுதாயத்தில் மாறுதலை ஏற்படுத்தவும் உதவும் நோக்கங்களோடுதான் ஒரு நிறுவனம் ஆரம்பிக்கப்படுகிறது. தனி மனிதனை இரு காரணிகள் பாழ்படுத்த முடியும். முதலாவது காரணி அகங்காரம். மற்றது பொறாமை. பொறாமை என்பது ஒருகொள்ளை நோய். அகங்காரமோ ஆபத்தான கிருமி. இரண்டுமே ஒரு பயிரை அழிக்கக் கூடியவை. மனித வாழ்வு எனும் மரத்தில் பொறாமை உள்ளிருந்தே ஊறுசெய்து மனிதநேயத்தைப் பாழ்படுத்தும். அகங்காரமோ தன்னை வெளிக்காட்டி நின்று மனிதப்பண்பை மறைத்துவிடும். எனவே எமது நிறுவனத்தில் அகங்காரம், பொறாமை ஆகியவற்றின் பாற்படாது புறத்தே நின்று பரந்த மனப்பாங்கைவளர்ப்போமாக. தீயபண்புடையவர் ஒருவர் தம்மையும் கெடுத்து தாம் வாழும் சமுதாயத்தையும் இழிவுக்குள்ளாக்குகிறார். கூடுமானவரை நாம் அகங்காரத்தையும் பெறாமையையும் குறைத்துக் கொள்ள எம்மாலான ஒவ்வொரு முயற்சியையும் மேற்கொள்ள வேண்டும்.

ஒவ்வொருவரும் பணியாளரே. எங்களில் எவருமே எஜமானரல்லர். இதனை விளக்குவதற்கு ஒரு சிறிய கதையுண்டு. அரசன் ஒருவன் தன் நெடுங்கால நண்பருடன் பேசிக்கொண்டிருக்கையில் தான் ஓர் எஜமானன் என்று கூறினான். நாடு முழுவதும் தனதே என்றும் அதன் குடிமக்கள் தன் வேலையாட்கள் என்றும் உரைத்தான். தனக்குப் பணம் ஏதும் தேவையில்லை. எல்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரங்களும் தன்னிலேயே தங்கியுள்ளன. தான் யாருக்கும் எதையும் விட்டுக்கொடுக்க வேண்டியதில்லை. தான் யாருடைய பணியாளனும் அல்லன் என்றான். இவ் வெல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த அவனது பழைய நண்பன் சிரித்துவிட்டுப் பின்வருமாறு கூறினான். ''அரசனிலிருந்து ஆண்டிவரையும், படிக்காத பாமரனி லிருந்து ஞானிவரையும் எல்லோரும் அடியவர்களே. ஆள்பவர்களல்லர், கடவுள் ஒருவரே ஆள்பவன். நீர்தான் அதியுயர்ந்த அதிகாரியென எண்ணுவீராயின், நீர் தவ றிழைக்கிறீர். அது மடைமையின் அடையாளம். நீரும் நானும் மற்றையவர்கள் ஒவ்வொருவரும் அடியவர்களே'' இவ்வாறு கூறக்கேட்ட அரசன் தன் பழைய நண்பனைப் பார்த்துக் கேட்டான்.

''இவற்றையெல்லாம் நீ எம் மக்கள்முன் நிரூபிக்க முடியுமா? நான் இரண்டு நாள் அவகாசம் தருகிறேன். மக்களிடம் கேட்டு நான் ஆள்பவனா அல்லது அடிமையா என்பதை அவர்கள் வாயிலிருந்தே பெறவேண்டும். நீர் சொல்வதை உம்மால் நிரூபிக்க முடியாமல் போனால் நான் எனது நாட்டிலிருந்து உம்மை வெளியேற்றி விடு வேன்'' அதற்கு நண்பன் ''அரசனே! நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் நான் சொல்வது உண்மையே. நீங்கள் நம்பினாலும், நம்பாவிட்டாலும், என்னைத் தங்கள் இராச்சியத்திலிருக்கவிட்டாலும் அல் லது விடாவிட்டாலும் உண்மை ஒருபோதும் மாறாது. உண்மைக்கு வடிவம் ஒன்றே; இரண்டல்ல''. என்றான் அரசன் நண்பனுக்கு இரு நாட்கள் அவகாசம் கொடுத்து வெளியேறுமாறு பணித்தான். அரசனது கட்டளைக்கிணங்கி அவன் சென்று கொண்டிருக்கும் போது தன் ஊன்றுகோலை கீழேவிழப் போட்டு விட்டுக் கூறினான் ''ஐயோ அரசே! என்னால் குனியமுடியாது. அக்கம்பக்கத்தில் ஒரு வேலையாட்களுமில்லை. ஊன்று கோலின்றி என்னால் ஓர் அடியேனும் எடுத்து வைத்து முன்னேற முடியாது. எனக்கு மிகவும் கஷ்டமாயிருக் கிறது. எப்படிப் போகப்போகிறேனோ தெரியவில்லை.,,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றான்; தன் முன்னைய நண்பனின் இயலாமையைக் கண்ணுற்ற அரசன், "நண்பனே கவலை வேண்டாம். நான் உனக்கு உதவுவேன்" என்று கூறிக் கொண்டே ஊன்றுகோலை எடுத்து நண்பனிடம் கொடுத்தான். ஊன்றுகோலைப் பெற்ற நண்பன் அரசனை விளித்துக் கூறினான். "நன்று ஐயனே! இப்போது நீங்கள் எனது வேலையாள். துன்பம் வந்துற்ற போது நீங்கள் உதவினீர்கள். உதவி என்பது சேவையே. முழு அகங்காரத்துடன் தாங்கள் யாருக்கும் வேலையாளல்லன் என்று கூறினீர்கள். என்போன்ற இயலாதவனுக்கு நீங்கள் ஓர் ஊன்றுகோல் தந்தீர்கள். இப்போது நான் எஜமானன். நீங்கள்தான் பணியாள்" அறிந்தோ அறியாமலோ உலகில் ஒவ்வொருவரும் பணியாளரே. ஆள்பவன் எவனுமில்லை. எவ்வளவுகாலம் நீங்கள் சேவையாற்ற முடியும்? உலகில் ஒவ்வொருவருக்கும் ஓர் ஆசை இருக்கும். அதனை அடைய ஒவ்வொருவரும் முயல்வது இயற்கை. பதிலுக்கு ஏதோவொன்றை வேண்டித்தான் ஒருவர் மற்றவரை நேசிக்கிறார்.

உலகில் யரும் கைம்மாறு கருதாது எவர் மீதும் அன்பு செலுத்துவதில்லை. கைம்மாறு கருதும் மனிதன் அடிமை. இறைவன் மாத்திரம்தான் கைம்மாறு கருதாது அன்பு செலுத்துபவன். ஆள்பவன் எஜமானன். மனிதர்களும் யாவரும் அடிமைகளே. உலகம் ஒரு நாடக மேடை போன்றது. மனிதர்கள் எல்லோரும் நடிகர்கள் கடவுள் ஒருவர் தாம் இயக்குநர். செல்வமும் ஆற்றலும் தரும் அதிகாரத்தையிட்டு இறும்பூது எய்தும் எஜமானன் என உன்னை நீ கருதுவது தவறானது நீ எஜமானனாக வாழ்வதற்கன்றிச் சேவைபுரியவே கடப்பாடு உடையவன். என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். ஆனந்தம் என்பது சேவைமனப்பாங்கிலிருந்துதான் தோன்றுகிறது அது அதிகார மனப்பாங்கிலிருந்து (மேலாண்மை உணர்விலிருந்து) பிறப்பதல்ல. செல்வமும் அதிகாரமும் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரது பசியைத் தணிக்காது. உணவு ஒன்றே பசியைத் தணிக்கும். செல்வம் ஒருவருக்கு அழகை அளிக்காது. பண்பு ஒன்றே ஒருவருக்கு அழகைக் கொடுக்கும்.

நாங்கள் அமைதி, செழிப்பு, இன்பம் ஆகியவற்றின் மூலத்தை விளங்க முயல வேண்டும். இதற்கு ஒரு சிறு உதாரணத்தைக் கூறலாம். ஒரு வீட்டில் தாய், தந்தை, மகன் என்ற மூன்றுபேரும் வாழ்கின்றனர். அந்த மூவரும் பூரண ஒத்திசைவுடன் அவ்வீட்டில் வாழும்போது அதை விடப் பூமியில் உயர்ந்த சுவர்க்கமே இல்லையெனலாம். ஆனால் அவர்களுக்கிடையில் சிறிதளவு அபிப்பிராய பேதமிருப்பினும் அந்த வீட்டைத் தவிர்ந்த மோசமான வேறு நரகம் இருக்கவே முடியாது. இதுபோன்றே உடம்பு ஒரு வீடு. அதில் மனம், வாக்கு, செயல் என்ற மூவர் வாழ்கின்றனர். மனிதர்கள் எல்லோரும் உடம்பில் ஒத்திசைவுடன் வாழும்போது அங்கு ஆனந்தம் பொங்கும். இதற்குமாறாக மனம், வாக்கு, செயலில்வேறுபாடிருப்பின் அதைவிட வேறு நரகம் இருக்கமுடியாது. ஆகையால் வாழ்க்கையின் மிக முக்கியமான விடயம் ஒருமைப்பாடே. மேற்குறித்த மூன்றினதும் ஒருமைப்பாடே உண்மையான தெய்வீகம். இந்த ஒருமைப்பாட்டின் மூலம் நீங்கள் பரிசுத்தமடைவீர்கள். இந்தப் பரிசுத்தம் எங்களை தெய்வ தத்துவத்திற்கு இட்டுச்செல்லும். ஆன்மிக மொழியில் இதை திரிபுடி என்பர். அதாவது மூவர் என்பதுபொருள். ஆன்மிக, உலக, சமுதாய வாழ்க்கையில் மாத்திரம்தான் இது முக்கியத்துவம்பெறுகிறது என்பதல்ல எங்கள் முழு வாழ்விலும் மனம், வாக்கு, செயல் என்ற மூன்றிலும் நாம் ஒருமைப்பாட்டை வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் உண்மையான சமாதானத்தை நாம் அனுபவிக்க முடியும்.

இன்று மனிதனுக்கு அமைதி மிகவும் இன்றியமையாதது. அமைதியை அளிக்கவேதான் நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட்டன. அவை சாயியின் பெயருக்கும் புகழுக்குமாக உண்டாக்கப்படவில்லை. ஒவ்வொருவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் இன்புறவைப்பதே அதன் நோக்கம். உலகில் பல்வேறு நிறுவனங்கள் உள்ளன. ஆயினும் சாயி நிறுவனம் ஏனையவற்றைப் போன்று இருத்தல் கூடாது. நாம் ஒருமித்துப் பணிபுரியவேண்டும். எல்லோரும் சகோதர சகோதரிகளே. மனிதனின் சகோதரத்துவ உறவும் கடவுளின் தந்தையுறவும் என்ற கூற்றினை நினைவில் இருத்துங்கள். இது சமுதாயத்தில் நன்கு கடைப்பிடிக்கப் படவில்லை. ''நான்தான் இணைப்பாளர். எனக்கு அதிகம் தெரியும். நீ பேசாதே'' என்ற உணர்வு சபதமிட்டு உதறித் தள்ளவேண்டியது. நீங்கள் பெயரளவிலேதான் இணைப்பாளர். எல்லோரும் பணியாளர்களே. நீங்கள் பணியாளரின் எஜமானர். அவ்வளவுதான் ஒரு பணியாளன் எஜமானன் தலைமை தாங்க ஏனையோர் பின் தொடர்வர். அவர்தான் எஜமானன் என்று கூறிக் கொண்டு ஒன்றும்செய்யாமல் வாளாவிருக்க யாரும் அவரைப் பின்பற்றமாட்டார்கள். இணைப்பாளர் முதலில் முன்னிட்டுச் செல்லவேண்டும். அதன்பின்தான் மற்றவர்கட்கு எடுத்துச் சொல்லக் கற்றுக்கொள்வார். நீங்கள் ஒன்றும் செய்யாது வாளாவிருந்தால் மற்றையவருக்கு எடுத்துரைக்கும் உரிமை உங்களுக்குக் கிடையாது. உங்களுக்கு உரிமை இல்லாதபோது மற்றவர்கள் உங்களை மதியார். உண்மையான மதிப்பைச் சம்பாதிக்க நீங்கள் சொல்வதை நீங்களே செய்து காட்டவேண்டும். முதலில் நீங்கள் அப்படி "ஆகுங்கள்" இரண்டாவது "செய்யுங்கள்" மூன்றாவது "சொல்லுங்கள்". முதலில் "ஆகா" மல் இரண்டாவது "செய்" யாமல் நீங்கள் "சொல்" லுதல் மட்டும் செய்ய முடியாது. எங்கள் நிறுவனத்தில் எல்லாரும் கடுமையாக உழைக்கிறார்கள். ஆனால் ஆன்மிகப்பாதையில் அவர்களுக்கு வழிமுறைகளைத் தெரிந்து கொள்ள முடிவதில்லை — எது செய்ய வேண்டும்? எப்படி அதைச் செய்ய வேண்டும்? இவையெல்லாம் தெளிவாக இருத்தல் வேண்டும். எல்லாரும் செயற்றிறனுடையவர்கள். செயற்றிறனோடும் உற்சாகத்தோடும் இன்பம் அடையக் கடவுளையும் சேர்க்க வேண்டும். கடவுளின்றி ஓரிடமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்லை. எதனைச் செய்தாலும் அது கடவுளின் பணி யென நீங்கள் உணரவேண்டும். கடவுள் இவ்வுடம்பின் மூலம் பணிபுரிகிறார். இம்மனத்தின் மூலம் கடவுள் செயலாற்றுகிறார். அவர் இந்தக் கைமூலம் செய்கிறார். இவ்வுணர்வுடன் நீங்கள் செயலாற்றும்போது எந்த அகங்காரமும் எழச் சந்தர்ப்பம் இருக்காது. உடல் எதிர்மறைத் தொடர்பே. அது உயிரற்றது ஜடம்தான் மனமோ ஆசைகளின் முடிச்சுத்தான். அது கற்பனை மாத்திரம்தான். நீங்கள் கற்பனை மட்டுமே கொண்டவர்களல்லர். நீங்கள் உடம்புமல்ல. நீங்கள்தான் ஆத்மா! இவ்வாறு சிந்தியுங்கள். "நான்தான் ஆத்மா! நான்தான் ஆத்மா!" அதன்பின் எந்த அளவும் நீங்கள் வேலை செய்யலாம். நீங்கள் யாருக்கும் ஏவல் புரிவதாக எண்ணிவிடக்கூடாது.

நீ எது செய்யினும் "நான் செய்வது எனக்கே எனக்கே எனக்கே" என உணரவேண்டும். இது ஏனென்றால் நீ எங்கும் இருக்கிறாய் என்பதால்தான். நீ ஒருமுகப்பட்ட மனம் உடையவனாக இருத்தல் வேண்டும். நீ எந்த நாமத்தையும் கூறி அழைக்கலாம். இராமர், கிருஷ்ணர், இயேசு, அல்லா – எல்லாம் ஒன்றே. நாம ரூபங்கள் வெவ்வேறாயினும் கடவுட் பண்பு ஒன்றே என்பதை நீ புரிந்துகொள்ள வேண்டும். அந்த உணர்வோடு நீ சேவையிலீடுபடவேண்டும். நாம் என்றும் அதிகாரத்தையோ, அல்லது பலத்தையோ செலுத்தல் ஆகாது நாம் அன்பை விளக்கி அதனைப் போதிக்க வேண்டும். அதிகாரத்தை நீங்கள் பயன்படுத்த முற்படும்போது வேறுபாடுகள் எழலாம். சிலவேளைகளில் நீங்கள் கூறும் வார்த்தைகளின் தொனி மாறலாம். ஆனால் இதயத்தை மாற்றக்கூடாது. அன்புக்கும் அன்புக்கும், இதயத்துக்கும் இதயத்துக்குமிடையில் ஒரு தொடர்பு இருக்கின்றது. சில நேரங்களில் சுவாமி இதனைத்தான் செய்கிறார். மாணவர்கள் நன்கு நடந்து கொள்ளாத நேரங்களில், அவர்களைப் பார்த்து சுவாமி சொல்லுவார் "பங்காரு நீ அப்படிச் செய்யக் கூடாது, நீ அப்படிச் செய்யக் கூடாது" என்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் இன்னும் நல்லாக நடக்கவில்லையெனில் சுவாமி தம்முடைய குரலை உயர்த்துவார். சுவாமியின் குரல் மாறுகிறதே தவிர அவரின் இதயம் மாறுவதில்லை. அதைத்தான் நீங்கள் வெளிப்படையாக எடுத்துக்காட்ட வேண்டும். நீங்கள் ஒருபோதும் வெறுப்புணர்ச்சிக்கு இடமளிக்கக்கூடாது. சில நேரங்களில் குரல் மாறுகிற தென்றால் அதன் பின்னணியில் ஒரு நோக்கமிருக்கும். ஆகவே மனத்தில் நோக்கத்தை வைத்துக்கொண்டு நீங்கள் செயலை முன்னெடுத்தல் வேண்டும்.

இந்த உலகில் அமைதிதான் மிகவும் வேண்டியது. அன்புருவங்களே! சேவைதான் ஆன்மிக சாதனை, ஆன்மிகப்பயிற்சி என்பது தியானமும் செபமும் செய்வது மாத்திரமல்ல, சேவைதான் மேலான உயர்ந்த புனிதமான குறுக்குவழி. நீங்கள் தியானத்திலிருக்கிறீர்கள், ஒரு நிமிடத்துளி அளவுக்குக்கூட உங்களால் மனத்தை ஒருமுகப் படுத்தி இருக்க முடியுமா? நீங்கள் ஜெபம் செய்கிறீர்கள். ஒருகணப் பொழுதேனும் உங்கள் மனம் ஒருமைப்பட்டு இருக்க முடியுமா? அது நளாந்தக்கடமைபோல ஆகி விட்டது. இது சரியானதல்ல. இவ்வாறு காலத்தை வீணே கழியாமல் சமூகத்தை நோக்கிச் சென்று பணிபுரியுங்கள் அவ்வாறு பணிபுரியும்போது நீங்கள் ஆண்டவனுக்குத் தொண்டு புரிவதாக உணர்வீர்கள். சேவையிலீடுபடும் போது நீங்கள் உங்கள் அகங்காரத்தை விட்டொழிக் கிறீர்கள். எல்லாரும் உடன்பிறப்பு என்ற உணர்வு ஏற் படவேண்டும். உங்கள் செல்வம் எது? அன்புதான் அச் செல்வம். அதுதான் உண்மையான செல்வம். பணம் வரும், போகும். ஆனால் அன்பு எனும் செல்வம் நின்று வளர்வது. பொன் அவ்வாறல்ல. இந்த உண்மையை நீங்கள் உணரவேண்டும். சமூகப்பணியை மேற்கொள்ள ஒருவர் சுயநலத்திலிருந்து விடுபட்டு ஆன்மிக விழிப் புணர்வை வளர்த்துக்கொள்ளவேண்டும். தனி ஆள் ஒரு வர் உலகத்தைத் திருத்தமுடியாது. உலக நலனை உறுதி செய்யப் பலர் ஒன்று சேரவேண்டும். உதாரணமாக இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து விரல்களைப்பாருங்கள். இதில் ஒருவிரல் மாத்திரம் தனித்துநின்று ஒரு காரியத்தைச்செய்யமுடியுமா? கிடையவே கிடையாது. முற்றிலும் முடியாத காரியம் ஐந்து விரல்களும் ஒன்றிணையும் போதுதான் அவை வேலை செய்யமுடியும். இக்கைக்குட்டையைப் பாருங்கள். நீங்கள் ஐந்துவிரல்களும் ஒன்றிணையும்போது அதனைபொறுக்கி எடுக்கலாம். ஒரு விரல் தனித்துக் கைக்கூட்டையை உயர்த்தக்கூட முடியாது. ஐந்து விரல்களும் ஒன்றிணையும் போதுதான் மதிப்பு ஏற்படுகிறது. ஆகவே சாயி நிறுவனம், சாயி சேவதாள், சாயி சேவாசமிதி, சாயி கல்வி வட்டம், சாயி பாலாவிகாஸ் எல்லாம் ஒன்றிணைய வேண்டும். அதுதான் ஒருமைப்பாடு. ஒவ்வொருவரும் தத்தம் கடமையை செய்ய வேண்டும். சிறுமை பெருமை என்ற எண்ணமின்றி ஒவ்வொருவரும் தத்தம் கடமையைச் செய்யும்போதுதான் வளம் ஏற்படும். இதற்குச் சிறிய உதாரணம் ஒன்றுண்டு. இன்று அணுச்சக்தியால் உந்தப்படும் ஏவுகணைகளைப் பார்க்கிறீர்கள். அந்த எவுகணைகளில் பல கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. ஏவுகணையொன்று பூதாகாரமான இயந்திரம் என்று நாம் எண்ணுகிறோம். ஆனால் ஏவுகணைகளில் ஆணிகள் சுரைகள், திருகாணிகள் கம்பிகள், ஊசிகள் முதலியன அந்த அந்தப் பொருத்தமான இடங்களில் பொருத்தப் பட்டிருக்கின்றன. இந்தப் பெரிய இயந்திரத்தில் ஒரு திருகாணியோ அல்லது ஊசியோ இயக்கம் இழந்து போனால் ஏவுகணைக்கு என்ன நிகழும் என்பதை உங்களால் கூற முடியாது. ஒரு சிறு தனி ஊசி கூட முக்கியமானது. அதொன்றில்லையென்றால் ஏவுகணை எரிந்து உடைந்து சாம்பராகிவிடும். இவ்வறே ஒரு நிறுவனத்திலும் எல்லோரும் வல்லமையும் பலமும் வாய்ந்தவர்கள். சிறியவர், பெரியவர் என்றெல்லாம் வேறுபாடுகள் நாம் பாராட்டக்கூடாது. ஒரு நிறுவனம் இயந்திரம் போன்றது. ஒவ்வொருவரும் தத்தம் கடமையைப் புரிய வேண்டும். ஒருவர் திருகாணி போன்றவராக இருக்கலாம். இன்னுமொருவர் ஆணியாகவோ, சுரையாகவோ, இருக்கலாம். ஆனால் இவ்வியந்திரத்துக்கு எல்லோரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியவர்களே. இதுதான் வேற்றுமையில் ஒற்றுமை. இந்த ஒற்றுமை இருக்கும்போதுதான் நாம் எதனையும் சாதித்து முடிக்க முடியும். இது ஒரு துணி இதனைத் துணிப்பது மிகவும் கடினம். காரணம் என்ன? காரணம் அதன் நூல்களை இழையோடி நல்ல உறுதி யாக நெய்யப்பட்டுள்ளபடியால் அதுபலம் வாய்ந்துள்ளது. ஒன்று ஒன்றாக அதன் நூல்களை வெளியே எடுப்பீர் களானால் அதனை துணிப்பது சுலபமாகி விடும். அவை ஒன்றிணைந்து நிற்கும் போது அவை மிகமிகப்பலம் வாய்ந்தவையாக விளங்குகின்றன. தனி நபர்கள் பிரிந்து நிற்கும்போது ஒரு நிறுவனத்தில் உறுதி கிடையாது. எல்லோரும் ஒன்றுபட்டு நிற்கும் போது அது சக்தி வாய்ந்ததாகும். ஒற்றுமையிலேதான் பலம் தங்கியுள்ளது. ஒற்றுமை நல்வாழ்வை உறுதிசெய்கிறது. தெய்வ உணர்வை வளர்ப்பது ஒற்றுமை. ஒரு நாட்டின் வளமே ஒற்றுமைதான். ஒரு நாட்டின் மேம்பாடு ஆகாயத் திலிருந்து கிடைப்பதல்ல. அது தனி மனிதனது ஒற் றுமையிலிருந்து பெறப்படுவது. எல்லோரும் ஒற்றுமை யாக உழைக்க வேண்டும். சுவாமியிடம் உங்களுக்கு நிரம்ப பக்தியுண்டு. ஆனால் அவரை நீங்கள் பின்பற்று வதில்லை. இதனால் என்ன பயன்? நீங்கள் சுவாமியிடம் பக்தி செலுத்தும்போது அவர் சொல்வதைப் பின்பற்ற வேண்டும். பகவத்கீதையையும் அருச்சுனனையும் உங் களில் சிலருக்குத் தெரியும். அல்லது தெரியாமலிருக் கலாம். அருச்சுனன் மிகவும் சாமர்த்தியசாலி. அவனது ஞானம் மிகவும் உயர்ந்திருந்தது. அவன் கிருஷ்ணருடன் திரும்பத் திரும்ப வாதித்தான். கீதையின் இரண்டு அத்தி யாயங்களில் முழுவதிலும் அருச்சுனன் கிருஷ்ணனுடன் வாதம் செய்து கொண்டேயிருந்தான். கிருஷ்ணன் செவி மடுத்துக்கொண்டேயிருந்தன். அர்ச்சுனன் ஈற்றில் களைத்து இளைத்து நின்றான். அதன்பின்தான் கிருஷ் ணன் கேட்டான்". அர்ச்சுனா! உன்னிடமுள்ளதெல்லாவற் றையும் கொட்டி இளைத்து விட்டாயா? இப்போது நான் பேசலாமா". அவன் கூறினான்" ஆம் சுவாமி" கிருஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணன் "இவையெல்லாம் வீண் காலவிரயம். உன்னுடைய அறிவு பூரணமான சமநிலையில் இருக்கவில்லை. சம நிலை பூரணமாக இல்லாவிட்டால் மனித இனம் வளர்ச்சிகாண முடியாது. நீ அறிவின் மூலம் ஆக்கமடையாது அதன் அழிவிற்கு அடிகோலுகிறாய். நீ அறிவினால் முதலில் ஆக்கத்தைத்தேடு. அது வாழ்வின் சமநிலைக் கேதுவாகும். இன்று வாழ்வு என்பது எல்லா சமநிலையையும் இழந்து விட்டது. வாழ்வில் சமநிலை இல்லாத போது அறிவு கெட்டுப்போகிறது" என்றுரைத்தான்.

ஆகவே முதலில் நாம் அறிவினால் (மேம்பாடு) ஆக்கமடைய வேண்டும். அறிவினால் ஆக்கமடைதல் என்பதன் பொருள் என்ன? புனிதப் பாதையில் முனேறிச் செல்வதே ஆக்கமடைதலாகும். தீயனவற்றைப்பாராதே நல்லனவற்றைப்பார். அதுதான் அறிவினால் ஆகும் ஆக்கம். தீயனவற்றைப் பேசாதே நல்லனவற்றையே பேசு. தீயன செய்யாதே நல்லன செய். அதுதான் அறிவினால் ஆகும் ஆக்கம். தீயனபார்த்தல், தீயன பேசுதல், தீயனகேட்டல் — இவையனைத்தும் அறிவின் அழிவு ஆகும். தெரிந்தோ தெரியாமலோ நாம் எமது அறிவைப் பயன்படுத்தாது பாழடிக்கிறோம். கிருஷ்ணன் கூறினான் "அருச்சுனா முதலில் உன் பேச்சை நிறுத்தி விட்டு நான் கூறுவதைப் பின்பற்று". அருச்சுனன் இரு கைகளையும் கூப்பியவண்ணம் சொன்னான் "கரிஸ்யே வசனம் தவ" அதாவது "நீ என்ன சொன்னாலும் என்ன செய்தாலும், அவை எனது நன்மையின் பொருட்டே, நான் உன்னைப் பின்பற்றுவேன்" கிருஷ்ணன் அதனைத் தொடர்ந்து அவனை மாண்பின் உச்சிக்கே இட்டுச் சென்றான். நல்லதோ, தீயதோ, சரியோ பிழையோ கடவுளின் கட்டளைகளை நம் விவேகத்தால் ஆரயக் கூடாது. ஏனெனில் கடவுளின் கட்டளைகள் தன்னலமற்றவை. ஆனால் நீங்கள் அதனைப் புரிந்து கொள்வதில்லை. நல்லனவற்றை நீ செய்யும்போது அது உனது நன்மைக்கே. மாறாக நீ தீயன செய்தால் அதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகும் கேடு உனக்கேயாகும். இலாபமும் நட்டமும் சேர்ந்து உன்னையே சாரும். சுவாமிக்கு இலாபமோ நட்டமோ ஒன்றுமில்லை. நான் என்றும் ஆனந்தமாயிருக்கிறேன். நீங்கள் ஆனந்தமாக இருக்க விரும்பின் சுவாமியைப் பின்பற்றுங்கள். அதாவது நிறுவனத்தின் ஒழுங்கு விதிகளையும் கட்டுப்பாடுகளையும் கடைப்பிடியுங்கள். அப்போதுதான் மனத்திலும் உடம்பிலும் சமூகத்திலும் அமைதியும் பாதுகாப்பும் ஏற்படும். அன்பின் திருவுருவங்களே! போனது போகட்டும் அது. மீண்டும் வராது எதிர்காலம் உங்களுடையதல்ல எதிர்காலத்தைப் பற்றி யோசியாதீர்கள். நிகழ் காலத்தைப் பயன்படுத்தி வாழ்க இது சாதரணமான நிகழ்காலமல்ல (Present) இது எங்கும் நிறைந்தது. (Omnipresent) கடந்தகாலம் நிகழ்காலத்தில் தங்கியுள்ளது. எதிர்காலமும் கூட நிகழ்காலத்தில் உள்ளது. ஆகவே இன்புற்றிருந்து நல்லன செய். நிகழ்காலத்தைதைப் பற்றிச் சிந்தனை செய். கடந்த காலத்தையோ அல்லது எதிர்காலத்தையோ பற்றி சிந்திப்பது வீண் காலம் கடத்தலேயாகும். "அவன் இப்படிக் கூறினான் நீ அப்படிக் கூறினாய்" என்றெல்லாம் சிந்திக்காதே நடந்தது நடந்து விட்டது. கடும் சொற்கள் காரணமாக வெறுப்புணர்வு இருக்கக் கூடாது. அது எல்லாவற்றையும் மறந்து விடவேண்டும்.

Hellow "ஹலோ" என்று நீங்கள் அழைப்பதில் என்ன பிரயோசனம்? உங்கள் பரிசுத்தமான இதயத்திலிருந்து (Hollow inside) உங்கள் அழைப்பு வெளிவரவேண்டும். மனச்சுத்தியின்றி உள்ளே வெறுப்புணர்வை வைத்துக் கொண்டு மற்றவர்களை விளிப்பதில் என்ன பயன்? மனப்பூர்வமாக அழையுங்கள். அதுதான் மனம், வாக்கு காயங்களின் இணைப்பு. அப்போதுதான் முழு உலகமும் உங்கள் கையிலிருக்கும். முழு உலகமும் இங்கே (பிரசாந்தி நிலையத்தில்) தானுண்டு. அதற்கு என்ன காரணம்? சுவாமியின் அன்புதான் அதற்குக் காரணம். சுவாமி சொல்வதைச் செய்கிறார். அதேபோல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் அனைவரும் கடவுளின் தூதுவர்கள். இந்த மூன்றின் ஒற்றுமையும் உங்களிடம் காணப்பட்டால் உலகம் பூராவும் ஒரு சாயி நிறுவனமாகும். ஒருவர் எப்போதும் தயவுகாட்ட முடியாது. ஆனால் தயவாக ஒருவர் பேசமுடியும். முந்திய தீயவினையின் பயனாகச் சிலரிடம் பொறாமையும் தற்பெருமையும் காணப்படலாம். ஆனால் அவற்றிக்கு இடம் கொடுக்கக்கூடாது. அவர் ஓர் ஜேர்மனியர், அவர் அமெரிக்கர், அவர் அவுஸ்திரேலியர் அவர் கிறிஸ்தவர் என்றெல்லாம் வேறுபாடுகள் இருக்கவே கூடாது. யேசு கூறினார் "அன்புள்ள மகனே எல்லாரும் ஒன்று, எல்லாரிடமும் சமமாகப்பழகு" என்று. ஆகவே எல்லாரும் ஒன்றே ஒன்றுதான். பலவாகத் தன்னை வெளிக் காட்டுகிறது. இந்த ஒருமை ஒவ்வொருவரிலும் மிளிர் கிறது. இங்கே ஒன்று என்ற எண்ணும் ஒன்பது என்ற எண்ணும் உள. எது பெரியது? ஒன்றா அல்லது ஒன்பதா? உங்களையே கேட்டுப்பாருங்கள். உலக ரீதியாக ஒன்பது என்ற எண் ஒன்று என்ற எண்ணிலும் பெரியதுதான். ஆன்மிகத்தில் ஒன்று என்றஎண் எல்லாவற்றிலும் பெரி யது, எவ்வாறு? ஒன்று சக ஒன்று சக ஒன்று ………… ஈற்றில் ஒன்பது ஆகிறது. ஒன்று இன்றேல் ஒன்பது இராது. நீங்கள் ஒன்பதுதான் பெரிய எண் எனப் பெருமை கொள்ளக் கூடாது. ஒன்பது தொகையில் பெரியதுதான். ஆயினும் ஒன்று என்பது தகமையில் மிகப் பெரியது. தகமை இல்லாத தொகை பயனற்றது.

அன்பின் திருவுருவங்களே! நீங்கள் ஒன்றிணைந்து உழைப்பதின் மூலம் உலக நன்மைக்காகப் பாடுபடுகி றீர்கள். இதுதான் ஒருவர் தன் சொந்த நாட்டிற்கு ஆற்றும் சேவை. உண்மையான சேவை. பிரதம மந்திரி யாலோ, ஜனாதிபதியாலோ செய்து முடிக்கமுடியாததை நீங்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து செய்ய முடியும். அரசினால் செய்ய வேண்டியது எதுவோ அது துண்டா டப்பட்டு அரைகுறையாக நிற்கின்றது. அன்பினால் ஆக் கப்பட்ட பணி ஒற்றுமையை உருவாக்குகிறது. நாங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்ல நாடுகளுக்குமான நலனுக்காக உழைக்க வேண்டும். மனித இனம்முழுவதும் இன்பமும் அமைதியும் இணைந்து வாழவேண்டும் என்பதே எங்கள் குறிக்கோளாக இருக்க வேண்டும். இதுதான் எங்கள் நோக்கம். காரணம் இதுதான். "தேசங்கள் பல, ஆனால் பூமி ஒன்று, விண் மீன்கள் பல, ஆனால் விண் ஒன்றே, ஆபரணங்கள் பல ஆனால் தங்கம் ஒன்றே". இந்த மனப்பாங்கோடு நீங்கள் பணிபுரிய வேண்டும். இதுதான் வேற்றுமையில் தோன் றும் ஒற்றுமை என்ற உண்மை. நான் இங்கு இருக் கிறேன். நீங்கள் அங்கு இருக்கிறீர்கள். ஆனால் எங்கள் மூச்சோ ஒரேமாதிரியானது. மூச்சு ஒன்றாயின் பிறப்பும் ஒன்றுதான். இந்த ஆன்மிகப் பேரன்புடன் நீங்கள் நிறு வனத்தை வளர்த்து அதன் மூலம் சேவை மனப்பான் மையை மேலோங்க வைக்க வேண்டும். பலர் மனப்பூர் வமாக உழைக்கிறார்கள். எனினும் அறியாமை காரண மாக சில தவறுகள் நிகழத்தான் செய்கின்றன. சுவாமி யின் மேல் நீங்கள் வைத்திருக்கும் பிரேமையே உங்க ளுக்கு வேண்டிய ஆற்றலை அளிக்கும். அதுதான் முத லில் வருவது அதுபற்றிக் கவலையின்றி முன்னெடுத்துச் செல்லுங்கள். அதுதான் முக்கியமானது. எல்லா வழி களிலும் அது உங்களுக்கு வெற்றியை அளிக்கும். ஆன்மிக வாழ்வு எல்லாவற்றிலும் அதியுயர்ந்த ஒன்று. வேறு எந் தத்துறையிலும் இந்த ஆனந்தத்தையும் களிப்பையும் நீங்கள் பெறமுடியாது:

உலகில் பல ஆன்மிக நிறுவனங்கள் இருப்பினும் அவற்றுக்கும் சாயி நிறுவனத்துக்குமிடையில் வேறுபாடு கள் நிறைய உள. இங்கே ஒரே தாய் வயிற்றுக் குழந்தை கள் போன்று எல்லாரும் ஒற்றுமையாக இருக்கவேண்டும். அதுதான் சுவாமியின் நிறுவனத்தின் பெருமை. ஒரு ஜேர்மனியர் ஒரு சீனரை விரும்பமாட்டார் ஒரு சீனர் ஒரு அமெரிக்கரை விரும்பாலிருக்கலாம். ஆனால் பிராசாந்தி நிலையந்தில் ஜேர்மனியர்கள், சீனர்கள், உருசியர்கள் எல்லோரும் ஒரு கூரைக்கீழ் வாழ்கிறார்கள், அதுதான் சாயி நிறுவனத்தின் தனித்தன்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையான பன்மையில் ஒருமையை வேறு எங்காவது காணமுடியுமா? பிராசாந்தி நிலையத்திற்குள் தான் இதனைக் காணலாம். இதோ இவர் ஈரானில் இருந்து வந்துள்ள பெண்மணி. இதோ மற்றவர் ஈராக்கிலிருந்து வந்துள்ள பெண்மணி. ஈரானும் ஈராக்கும் பகையாளர்கள். ஆனால் இங்கே இருவரும் ஒன்றாக வாழ்கிறார்கள். அதுதான் அன்பு. இந்த அன்பை வளர்த்தோமானால் உலகம் முழுவதும் ஒன்றாகும். ஒவ்வொன்றும் அன்பின் வழிநின்று செய்யப்படவேண்டும்: நளொன்றை அன்புடன் ஆரம்பித்து அன்பினால் நிறைத்து அன்புடன் முடியுங்கள். அதுதான் கடவுளை அடையும் வழி. கடவுள்மீது பக்தி செலுத்தச் சிறந்த வழி எல்லோர்மீதும் அன்பு கொண்டு எல்லோருக்கும் பணி புரிதலே. இதுதான் ஆதியில் தரப்பட்ட செய்தி. இறுதியில் தரப்படும் செய்தியும் அதுவே. சுகவாழ்வு, இன்பவாழ்வு சமாதான வாழ்வு தெய்வீக வாழ்வு ஆகியவற்றிற்காக உங்களை ஆசிர்வதிக்கிறேன். நான் உங்களை நேசிக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகர அன்பளிப்பு:

**கிளீன் கட்**

**மின்சாரநிலைய வீதி,**

**யாழ்ப்பாணம்.**

சு. வே. அச்சகம், 104, கஸ்தூரியார், வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org